**தென்பகுதி வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் (அதிவேகபாதை இணைப்பு முன்னேற்றத் திட்டம்) - 2019**

---

தென்பகுதி வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3028 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரிவு 2.09 இன் உறுப்புரை II உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது, வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. (அ) மேம்படுத்தலின் தேவைகளிற்கான அதிவேகப்பாதை வலையமைப்பினை தொடர்புபடுத்தும் தேசிய நெடுஞ்சாலைகளை திரையிடல் (ஆ) சாத்தியவள கற்கை, விபரமான பொறிமுறை, காணி சுவீகரிப்பு மற்றும் சிவில் வேலைகளின் பொடுட்கோடல் என்பவற்றிற்கான எதிர்கால செயற்திட்டங்களை நிரலாக்கல் (இ) தேசிய நெடுஞ்சாலைகளின் சுமார் 250 கி.மீ களிற்கான சாத்தியவள கற்கையை செய்தல் (ஈ) தேசிய நெடுஞ்சாலைகளின் சுமார் 200 கி.மீ றிற்கான விபரமான பொறிமுறையை கையேற்றல் (உ) நியமங்கள் மற்றும் நிர்மான தொழிநுட்பம் போன்றவற்றின் வடிவமைத்தலை மேம்படுத்துவதில் உதவி செய்தல் (ஊ) திட்டமிடல் முறை, நியமங்கள் மற்றும் நிர்மான தொழிநுட்பம் போன்றவற்றை வடிவமைத்தல், அதிவேகப்பாதை வலையமைப்புடன் தொடர்புபட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் வடிவமைப்பு என்பவை பற்றி பயிற்ச்சி நிகழ்ச்சிதிட்டங்களை வழங்கள் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 790.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6 மில்லியனானதுடன் அதில் ரூபா 659 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கள் திகதி 2019 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ரூபா 13.59 மில்லியன் தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 74,963.84 கடன் 2019 திசெம்பர் 31 இல் கடன் கணக்கினை மூடியதன் காரணமாக ஏடிபி இற்கு திருப்பிச்செலுத்த வேண்டியிருந்தது. இருப்பினும், மேலே மீளளிக்கப்பட்டதற்குள் உள்ளடக்கப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 43,222 மில்லியன் தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 238.41 ஜீஔஎஸ்எல் நிதி 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கடன் கணக்கில் சரியாக பதியப்பட்டிருக்கவில்லை. | 0.043 | நிதிக்கூற்றுக்களில் உள்ள கடன் கணக்கு ரூபா 43,222 ஆல் அதிகரித்து காணப்பட்டது. | உடன்படுகின்றேன். ஐவீ இல 16, இனை தயாரிக்கும் போது இது ஒரு நாணயமாற்று விகித மாறலாக கருதப்பட்டதுடன் அதனால் டபல்யு.ஐ.பி கணக்கிற்கு மாற்றப்பட்டது. | நிதி ஏற்பாடுகளின் மூலங்கள் நிதிக்கூற்றுக்களில் சரியான முறையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றம்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அதிவேகபாதை இணைப்பு முன்னேற்ற செயற்திட்டமானது இயலளவு அபிவிருத்தி மற்றும் விரிவாக்கத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையை கண்காணிப்பதற்கான ஆலோசனை சேவையின் குறிக்கோலினை அடைந்துகொள்வதற்காக 2014 ஓகஸ்ட் 22 இல் ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டமானது சாத்தியவள கற்கை மற்றும் 17 தேசிய மற்றும் 11 மாகாண வீதிகளின் 250.88 கிலோமீற்றர்கள் மற்றும் 239.07 கிலோமீற்றர் வீதிகளின் விபரமான வடிவமைப்புக்களை பூர்த்தியாக்கியிருந்ததுடன் ஆலோசகர் பணிகளை பூர்த்தியாக்கி ரூபா 482.92 மில்லியன் செலவளித்து அனைத்து சாத்தியவள கற்கை அறிக்கைகள் மற்றும் வடிவமைப்புக்களை 2016 ஓகஸ்ட் 31 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளித்திருந்தார். | வீதியினை வடிவமைப்பதற்காக ஏற்பட்ட செலவுகள் பலனற்றதாக ஆகிவிடும். | ஆம் உடன்படுகின்றேன் அனேகமான மும்மொழியப்பட்ட வீதிகள் காணி சுவீகரிப்பினை வேண்டியிருந்ததிலிருந்து அனைத்து பூர்த்தியாக்கப்பட்ட வடிவமைப்புக்களும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் அமுல்படுத்தலிற்காகவும் ஆர்டிஏ விற்கு ஏற்கனவே கையளிக்கப்பட்டிருந்தது, அமுல்படுத்தலானது உரிய காணித்துண்டுகள் சுவீகரிக்கப்படும் வரை ஆரம்பிக்க முடியாமலிருந்தது.<br>இருப்பினும், சில தெரிவு செய்யப்பட்ட வீதிகள் அமுல்படுத்தலிற்காக ஆர்டிஏ வினால் தொடரப்பட்டிருந்தது.<br>எனினும், மேற்கூறிய நிர்மானத்தை அமுல்படுத்த ஈசீஐபி க்காக இக் கடனில் எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. | வீதி புனர்நிர்மான வேலைகள் வடிவமைப்பு பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

### 3.2 பிழையாக பயன்னடுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஏடிபி கடன் உடன்படிக்கையானது 2014 ஓகஸ்ட் 22 இலிருந்து அமுலாகும் படி ஐ.அ.டொலர் 5 மில்லியனிற்காக 2014 மே 27 இல் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 143.53 மில்லியனிற்கு சமமான | ரூபா 143.53 மில்லியன் தொகையான கடன் செயற்திட்டத்தின் மிகுதி வேலைப்பரப்பினை பூர்த்திசெய்வதற்கு செயற்திட்டத்தினால் பயன்படுத்தமுடியாமலிருக்கும். | கடன் தொகையில் 84.17 சதவீதமான ஐ.அ.டொலர் 5 மில்லியனில் மொத்த கட்டணங்கள் ஐ.அ.டொலர் 4,208,266.63 ஆகும். கடன் தொகையானது | செயற்திட்ட கால எல்லைக்குள் பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டத்தின் அனைத்து வேலைப்பரப்புக்களும் முறையாக திட்டமிடப்படல் |

ஐ.அ.டொலர் 791,733 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்கலின் காணப்பட்ட தாமதத்தின் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் கடனின் முடிவுத்திகதியிலுள்ளவாறு செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, 2019 இற்கான வெளிநாட்டு கடனிற்கான ரூபா 24 மில்லியன் ஒதுக்கீடு மற்றும் ஜிஓஎஸ்எல் இற்கான ரூபா 30 மில்லியன் ஒதுக்கீடு என்பவற்றில், வெளிநாட்டு கடனில் ரூபா 6 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மற்றும் ரூபா 29 மில்லியன் ஜிஓஎஸ்எல் 2019 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட ஏனைய செயற்திட்டங்களிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, நியமங்கள் மற்றும் நிர்மான தொழிநுட்ப வடிவமைப்பினை போன்றவற்றின் மேம்படுத்தலில் உதவிசெய்தல், திட்டமிடல் நுட்பமுறைகள், வடிவமைப்பு திட்டங்கள் மற்றும் நிர்மான தொழிநுட்பம் போன்றவை தொடர்பாக பயிற்சி திட்டங்களை வழங்கள் போன்ற செயற்திட்ட குறிக்கோள்கள் செயற்திட்டத்தினால் முழுமையாக அடயப்பெற்றிருக்கவில்லை.

எதிர்பார்க்கைகள், வட்டி, மதிப்பிடப்பட்ட பீஎம்யூ செலவுகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. சேமிப்புக்கள் எஸ்ஆர்சீபீ இற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

வேண்டும்.